பக்கங்கள் - எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் 2037 புரட்டாதி 18 புதன்கிழமை (04.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:509

# பேச்சு நடத்த அரசு குறிப்பிட்ட திகதிகளை போவர் நேற்றுப் புலிகளிடம் முன்வைத்தார்

## சாதகமான பதிலுடன் வன்னியிலிருந்து அவர் கொழும்பு திரும்பியதாகத் தகவல்

கொழும்பு, ஒக்ரோபர்4

ஒஸ்லோவில் உத்தேச அமைதிப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகள் குறித்து நோர்வேயின் விசேட சமாதானத் தூதர் ஹன்சன் போவர் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளுடன் விரிவாகப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுகளை ஆரம்பிப் பதற்காக அரசுத் தரப்பினால் முன்வைக்கப்பட்ட திகதிகளை ஹன்சன் போவர் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார். அதற்கு விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து இணக்கமான பதில் ஒன்றைப் பெற்றுக்கொண்டு போவர் அங்கிருந்து கொழும்பு திரும்பினார் என்று சொல்லப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான அமைதிப் பேச்சுகளை எதிர்வரும் 30ஆம் திகதி அல்லது நவம்பர் பத்தாம் திகதி நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணங்கியுள்ளார் என்ற தகவலை அரசு நோர்வேத் தூதரிடம் தெரிவித்திருந்தது. இந்த யோசனையை நோர்வேத் தூதர் நேற்று கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் நடத்திய சந்திப்பின் போது அவர்களிடம் முன்வைத்தார் என்று கூறப்படுகிறது.

பேச்சை நடத்துவதற்கான திகதி தொடர்பில் விடுதலைப் புலிகள் சாதகமான யோசனை ஒன்றை நோர்வேத் தூதரிடம் நேற்று வழங்கினர்

(08ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதர் தங்கியிருந்த வேளை வன்னியில் வான் தாக்குதல்

கிளிநொச்சி,ஒக்.4

கிளிநொச்சியில் நேற்றுப் பகல் நோர்வேயின் விசேட தூதர் ஹன்சன் போவர் தலைமையிலான குழுவினர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளோடு பேச்சு நடத்திக் கொண்டிருந்த சமயம் வன்னிப் பகுதியில் விமானங்கள் குண்டுவீசித் தாக்கியிருக்கின்றன.

நேற்று முற்பகல் 11.30 மணிமுதல் 12.20 மணிவரை மூன்று கிபிர் விமானங்கள் இந்தக் குண்டுத் தாக்குதலை நடத்தின.

இந்தத் தாக்குதல் நடைபெற்றபோது முற்பகல் 11.45 மணிக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான ஜோன் ஹன்சன் போவரின் பேச்சுக்கள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஒக்.30 அல்லது நவ.10 இல் பேச்சை நடத்த அரசுத் தரப்பில் யோசனை

கொழும்பு, ஒக்ரோபர்4

விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான அமைதிப் பேச்சுகளை எதிர்வரும் 30ஆம் திகதி அல்லது நவம்பர் 10ஆம் திகதி நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கிறார். நோர்வே யின் விசேட தூதுவர் ஜோன் ஹன்ஸன் போவர் ஊடாக புலிகளுக்கு இந்தத் தகவலை அரசு தெரியப்படுத்தியிருக்கிறது. இது தொடர்பில் புலிகளின் பதிலுக்கு அரசு காத்திருக்கிறது. புதிய பேச்சானது 'ஜெனீவா-2' என்ற அடிப்படையில் அமையும்.

- இவ்வாறு தெரிவித்தார் அமைச்சரும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடகப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல.

கொள்ளுப்பிட்டியில் உள்ள தேசிய பாதுகாப்பு ஊடக நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது இத்தகவலை வெளியிட்டார்.

## ஒக். 28-30 இல் பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் இணக்கம்?

கொழும்பு, ஒக்ரோபர்4

அரசுடனான அமைதிப் பேச்சுக்களை எதிர்வரும் 28-30ஆம் திகதிகளில் ஒஸ்லோவில் நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் இணங்கியுள்ளனர். இதனை நேற்று வன்னிக்குச் சென்று திரும்பிய நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்சன் போவரிடம் புலிகள் தெரிவித்திருக்கின்றனர் என்று சமாதானப் பேச்சுக் குழுவினருக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டிருக்கிறது.

முன்னதாக விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை எதிர்வரும் 30ஆம் திகதி அல்லது நவம்பர் 10ஆம் திகதி நடத்துவதற்கு அரசு விரும்புவதாக நோர்வேயின் விசேட தூதர் ஹன்ஸன் போவர் மூலமாக விடுதலைப் புலிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டது என்று அரசாங்கப் பேச்சாளர் கூறியிருந்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஆக்கிரமிப்பு யுத்தம் இனியும் திணிக்கப்படுமானால் சமரசத்துக்கு இடமில்லை; இறுதி யுத்தமே தொடரும்

### போவர் மூலம் அரசுக்கு எச்சரிக்கைச் செய்தி என்கிறார் தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி,ஒக்.4

தமிழர் தாயகப் பிரதேசத்தை ஆக்கிரமிக்கின்ற யுத்த நடவடிக்கைகளில் இனியும் அரசுப் படைகள் இறங்குமானால் நாங்கள் இந்த சமரச முயற்சிகளிலிருந்து நிரந்தரமாகவே விலகிக்கொள்வோம். அதன்பிறகு ஆக்கிரமிப்பு இராணுவத்தினரை எமது தாயகப் பகுதிகளில் இருந்து முற்றாக வெளியேற்றும் வரை புலிகள் அரசுடன் எந்தவித சமரசத்துக்கும் போகமாட்டார்கள்.

- இவ்வாறு தம்மைச் சந்தித்த நோர்வே யின் விசேட தூதர் ஹன்ஸன் போவரிடம் தாம் உறுதிபடத் தெரிவித்திருக்கிறார் என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார்.

நோர்வேயின் விசேட தூதுவர் போவர் மற்றும் கொழும்புக்கான தூதர் பிரட்ஸ்கர் உட்பட நோர்வே குழுவினரை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மா விலை உயர்வு

கொழும்பு, ஒக்.04

கோதுமை மாவின் விலை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் 4 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக பிறிமா நிறுவனம் அறிவித்துள்ளது.

ஏற்கனவே ஒரு கிலோ 36 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட கோதுமை மா தற்போது 40 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் கோதுமைக்கு ஏற்பட்ட விலையேற்றமே கோதுமை மாவின் விலை அதிகரிப்பிற்குக் காரணம் என பிறிமா நிறுவனம் மேலும் தெரிவித்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## வலி.மேற்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் எரிபொருள் அட்டைக்கு இன்று பெற்றோல்

யாழ்ப்பாணம்,ஒக்.4

பிரதேச செயலகங்கள் மூலம் வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அட்டைகளுக்கு இன்று பெற்றோல் வழங்கப்படவிருப்பதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் தெரிவித்தார்.

ஒவ்வொரு பங்கீட்டு அட்டைக்கும் தலா இருநூறு ரூபாவுக்கு இன்று பெற்றோல் வழங்கப்படும் என்றும் -(08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களின் சத்தியாக்கிரகப் போர் தொடர்கிறது

கொழும்பு,ஒக்4

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்றும் நான்காவது நாளாக நாடாளுமன்றத்தில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.

'ஏ-9' வீதியைத் திறக்கும்படியும், வடக்கு - கிழக்கு உட்பட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருள்களை அனுப்பும்படியும் கோரி தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் கடந்த

(08ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு விடயத்தில் அரசு நிதானம்

### அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல



கொழும்பு, ஒக்.04

அமைதிப் பேச்சு விடயத்தில் அரசு மிக நிதானமாகச் செயற்பட்டு வருகிறது. - இவ்வாறு தெரிவித்தார் அமைச்சரும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடகப் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல.

கொள்ளுப்பிட்டியில் உள்ள தேசிய பாதுகாப்பு ஊடக நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது அவர் இத்தகவலை வெளியிட்டார். அங்கு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

23 வருடகாலமாகப் புலிகளால் கூறப்பட்ட பொய்கள் இனியும் தொடரக் கூடாதென்பதில் நாம் தெளிவாக இருக்கிறோம். பேச்சுகள் விடயத்தில் கூட புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் முன்னுக்குப் பின் முரண்பாடான கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றனர்.

இணைத்தலைமை நாடுகளின் இறுதிக் கூட்டம் பிரஸல்ஸில் நடைபெறுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னர் கருத்துவெளியிட்ட புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நிபந்தனையற்ற பேச்சுக்குத் தமது இயக்கம் தயாரெனக் கூறினார்.

ஆனால், பின்னர் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் இளந்திரையன், சம்பூர் [illegible] அரசுடன் பேச்சே இல்லையெனக் கூறினார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காத்தான்குடியில் நேற்று கலவரங்கள் சற்றுத் தணிவு

மட்டக்களப்பு, ஒக்.4

மட்டக்களப்பு, காத்தான்குடிப் பகுதியில் ஏற்பட்ட கலவரங்கள் நேற்று சற்றுத் தணிந்திருந்தன. எனினும், ஆங்காங்கே சில வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

கடைகள், வங்கிகள், நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டுள்ளன. பிரதான வீதியால் போக்குவரத்து தடை செய்து உள் வீதியால் போக்குவரத்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆரையம்பதி - காத்தான்குடி எல்லையில் பாரிய ட்ரக் வண்டியொன்றை வீதிக்குக் குறுக்கே நிறுத்தி போக்குவரத்தைப் பொலிஸார் தடைசெய்திருந்தனர்.

பெருமளவில் பொலிஸார் நகரமெங்கும் உள்வீதிகள், மக்கள் கூடும் இடங்களில் குவிக்கப்பட்டுள்ளனர். களுவாஞ்சிக்குடி, கல்குடா, வாழைச்சேனை, மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் நிலையங்கள் உட்பட அம்பாறையிலிருந்தும் பொலிஸார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத் தப்பட்டுள்ளது.

இதுவரை, இரு தரப்புகளையும் சேர்ந்த ஆறுபேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். திங்கள் நள்ளிரவும், செவ்வாய் அதிகாலையும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாத போதிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (த)

# இன்றைய நிலை குறித்த விவரம் திரட்ட ரவிராஜ் எம்.பி. யாழ். வந்தார்

தென்மராட்சி,ஒக்.4

யாழ்.மாவட்ட மக்களின் இன்றையநிலை தொடர்பான விவரங்களைத் திரட்டுவதற்கென நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.

யாழ்.மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர்கள், யாழ்.மறைமாவட்ட ஆயர், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடி திரட்டப்படும் தகவல்களுடன் கொழும்பு திரும்பும் தாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்த உள்ளதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாக குடாநாட்டில் இயல்பு நிலையை சீராக்க உரிய தரப்புகளுடன் பேச்சு நடத்தி மக்கள் படும் இன்னல்களை நிவர்த்தி செய்ய முயற்சிக்கவுள்ளோம் -

ஏ-9 வீதி மூடப்பட்டுள்ளதால் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணக்கூடிய விதத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் -

அதேபோன்று - யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள முக்கிய விடயமான ஏ-9 வீதி திறப்பது தொடர்பாக படைத்தரப்பு மற்றும் அரசுடன் கலந்துரையாடவுள்ளோம் -

பாடசாலைகளை விரைவில் திறந்து மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டுள்ளோம் -

யாழ்.மாவட்ட மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களுடன் நேரடியாக சந்திக்க முடியாத நிலை தற்போது தோன்றியுள்ளது -

இந்த நிலையைப் போக்க அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் - என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் உதயனுக்குத் தெரிவித்தார்.



கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த நோர்வே சமாதானத் தூதுவர் ஹான்ஸன் போவரை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

## அனர்த்த முகாமைக் கூட்டம்

தென்மராட்சி,ஒக்.4

தென்மராட்சி பிரதேச அனர்த்த முகாமைத்துவக் குழுக் கூட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

குழு உறுப்பினர்கள் அனைவரையும் இக்கூட்டததில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.

## உச்ச விலையில் சிமெந்து விற்பனை

உடுப்பிட்டி,ஒக்.4

வடமராட்சியில் சிமெந்தின் விலை ஆயிரம் ரூபாவுக்கு உயர்ந்துள்ளது.

தற்போதயை யுத்த சூழ்சிலையைச் சாட்டாக வைத்து சிமெந்து விற்பனையா ளர்கள் இருப்பில உள்ள சிமெந்து பக்கற் ஒன்று ரூபா ஆயிரம் வீதம் விற்பனை செய்து வருகின்றனர். (ப-155)

# செயலிழந்திருந்த 2ஆயிரம் இணைப்புகளை சீராக்கும் பணிகள் நேற்றுடன் பூர்த்தியாகின

## யாழ். ரெலிக்கொம் நிறுவன அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.4

குடாநாட்டில் செயலிழந்திருந்த 2ஆயிரம் தொலைபேசி இணைப்புகளும் முழுமையாகச் சீராக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

ஐந்து மற்றும் ஆறு இலக்கங்களுடன் தொடங்கும் இரண்டாயிரம் தொலைபேசி இணைப்புகள் கடந்த சில மாதங்களாக செயலிழந்திருந்தன.

புதிய பரிவர்த்தனை கருவிகள் பொருத்தப்பட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்றும்-

இந்தப் பணிகள் நேற்றுடன் பூர்த்தியாகின என்றும் - தெரிவிக்கப்பட்டது

புதிய இணைப்புக்கள் 'சி.எல்.ஐ' வசதியுடன் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வசதி தேவைப்படுவோர் ரெலிக்கொம் நிறுவனத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து கையளித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

பின்னர் வாடிக்கையாளர், 'சி.எல்.ஐ.' வசதியுடன் தொடர்புபடும் கருவியைக் கொள்வனவு செய்து பொருத்திக்கொள்ளலாம் என்றும் - ரெலிக்கொம் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (1)

# தனித்திருந்த மூதாட்டியை படுகொலை செய்துவிட்டு நகைகள் அபகரிப்பு

## ஏழாலை வடக்கில் திங்களிரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.4

ஏழாலை வடக்கில் நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் தனித்திருந்த மூதாட்டியைப் படுகொலை செய்துவிட்டு அவரது நகைகள் சூறையாடப்பட்டுள்ளன.

அதேயிடத்தைச் சேர்ந்த நடராசா நேசரத்தினம் (வயது 74) என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

பிரஸ்தாப மூதாட்டி வீட்டில் தனித்து வாழ்ந்து வந்தார் என்றும் -

இனந்தெரியாத நபர்கள் சம்பவதினம் இரவு அவரது வீட்டுக்குள் புகுந்து அவரின் கழுத்தை நெரித்துப் படுகொலை செய்துவிட்டு சங்கிலி, காப்பு, தோடு போன்ற நகைகளை அபகரித்துக்கொண்டு தப்பிவிட்டனர் என்றும் - விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் நீதிவான் விசாரணைகளை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (1)

# பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டில் பனை, தென்னை வள முகாமையாளரை கைதுசெய்யுமாறு நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம்,ஒக்.4

ஊர்காவற்றுறை, பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் வேலணைக் கிளையின் பொதுமுகாமையாளரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்யுமாறு ஊர்காவற்றுறை பதில் நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

பிரஸ்தாப கிளையில் தட்டெழுத்தாளராகப் பணியாற்றிவரும் குடும்பப்பெண் ஒருவரை இவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் எனக் கூறப்படும் முறைப்பாடு தொடர்பாகவே இவரைக் கைதுசெய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப நபர் குறிப்பிட்ட பெண்ணைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியிருந்தார் என்றும் -

அதன் பின்னர் அவரை வேலையில் இருந்து நீக்கிவிட்டார் எனறும் -

ஊர்காவற்றுறை பொலீஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதனை விசாரணை செய்த பதில் நீதிவான் இ.த.விக்னராஜா சம்பந்தப்பட்ட பொதுமுகாமையாளரை உடன் கைதுசெய்து தம்முன் ஆஜர் செய்யுமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (1)

# கதிர்வீச்சு சிகிச்சை பெற தினமும் 50 பேர் தெல்லிப்பழை செல்லலாம்!

## படைத்தரப்பு அனுமதி வழங்கியது

யாழ்ப்பாணம்,ஒக்.4

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கதிர்வீச்சு சிகிச்சை பெறவேண்டிய நோயாளர்கள் 50 பேர் தினமும் தெல்லிப்பழைக்குச் செல்வதற்குப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் கதிர்வீச்சு சிகிச்சை வழங்குவதற்கான நிலையம் இயங்கி வருகின்றது. இந்நிலையத்துக்கு தினமும் 40 நோயாளர்கள் செல்லவே படையினர் இதுவரை அனுமதி வழங்கியிருந்தனர்.

தற்சமயம் 50 நோயாளர்கள் செல்வதற்குப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர் என்றும் -

கதிர்வீச்சுச் சிகிச்சைக்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ள நோயாளர்களை எதிர்வரும் சனிக்கிழமை யாழ்.ஆஸ்பத்திரி 26ஆம் வார்ட்டுக்கு வருகைதருமாறும் -

புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் என்.ஜெயக்குமாரன் கேட்டுள்ளார். (1)

# சரசாலை வடக்கில் மினி சூறாவளி தாக்கி 8 வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன

தென்மராட்சி,ஒக்.4

சரசாலை வடக்கு கோணாவளைப் பகுதியில் கடந்த வாரம் இரவு மினி சூறாவளி வீசியதில் எட்டு வீடுகளினதும் நான்கு மலகூடங்களினதும் கூரைகள் தூக்கி வீசப்பட்டன.

இதனால் வீடுகளிலிருந்த உணவுப் பொருள்களும் ஏனைய பொருள்களும் சேதமடைந்தன.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் நிர்மாணிக்கப்பட்டு கடந்த ஜூலை மாதம் 20ஆம் திகதி குடியிருப்பாளர்களுக்கு கையளிக்கப்பட்ட 18 வீடுகளில் எட்டு வீடுகளே சூறாவளியினால் பாதிக்கப்பட் டுள்ளன.

மழைகாலம் ஆரம்பிக்க முன்னர் இந்த வீடுகள் புனரமைக்கப்படுமா என சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரியுள்ளனர்.



மினி சூறாவளியினால் பலத்த சேதமடைந்த வீடு ஒன்றினதும் மல கூடம் ஒன்றினதும் தற்போதைய தோற்றத்தைப் படத்தில் காணலாம். *(படங்கள்: தென்மராட்சிச் செய்தியாளர்)*

# அமைதிப் பேச்சுக்கு இரு தரப்பும் தாமதமின்றி இணங்க வேண்டும்

## ஐ.தே.கட்சி வலியுறுத்து

அமைதி முயற்சிகளை முன்னெடுத்துச் சென்று அதில் வெற்றி காண்பதற்கு அரசும், விடுதலைப் புலிகளும் தாமதமின்றி ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியிருக்கின்றது.

அந்தக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் உரையாற்றிய காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கருணாதிலக மேற்கண்டவாறு தமது கட்சியின் நிலைப்பாட்டை வலியுறுத்தினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

''ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவுக்கும், சுற்றுலாத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவுக்கும் இடையில் தற்போது சர்ச்சை எழுந்துள்ளது. இந்நிலையில், சமாதானப் பேச்சை முன்னெடுத்துச் செல்ல ஜே.வி.பி. தனது பங்களிப்பை வழங்கும் விடயத்தில் பின்னடித்து வருகிறது.

எனவே, அரசும், விடுதலைப் புலிகளும் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்து சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மீது குடிவரவு, குடியகல்வு சம்பந்தமாக குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அதுபற்றிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.''

- என்றார் அவர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# இலங்கையில் மனித உரிமை மீறல்கள்: சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு!

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ கடந்த நவம்பரில் பதவியேற்ற பின்னர், சட்டத்துக்கு முரணான வகையில் நாட்டில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டியுள்ள மனித உரிமைகள் அமைப்பு ஒன்று, இதற்காக அரசின் மீதும் புலிகள் உட்பட ஆயுதம் தாங்கிய குழுக்கள் மீதும் குற்றம் சுமத்தியிருகின்றது.

இந்த விடயம் குறித்து ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அந்த அமைப்புக் கோரியிருக்கின்றது.

'மனித உரிமைகளுக்கான இல்லம்' (Home For Human Rights) என்ற முன்னணி மனித உரிமைகள் அமைப்பே இப்படிச் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

அது மட்டுமல்ல. இவ்வாறு சட்டத்துக்கு முரணான முறையில் கொல்லப்பட்ட ஆயிரத்துக்கும் அதிகமானோரின் விவரங்களையும் அது வெளியிட்டிருக்கின்றது. கொல்லப்பட்டவர்களின் பெயர்கள், ஏனைய விவரங்கள், இடங்கள் போன்றவை எல்லாம் அந்த அமைப்பின் இணையத் தளத்தில் விலாவாரியாக வெளியாகியிருக்கின்றன.

இந்தப் பட்டியல் மற்றும் விவரங்களை, சட்டவிரோதக் கொலைகள் தொடர்பான ஐ.நா. விசேட பிரதிநிதி பிலிப் அஸ்டன், மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் போன்றோரிடமும் அந்த அமைப்பு சமர்ப்பித்திருக்கின்றது.

இலங்கை விமானப்படைக் குண்டு வீச்சினால் முல்லைத்தீவில் அறுபதுக்கும் அதிகமான பாடசாலை மாணவர்கள் பலியானமை, நான்கு மாத தமிழ்ச் சிசுக் கொலை, திருமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை, மன்னார் வங்காலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு தூக்கில் தொங்கவிடப்பட்டமை, அல்லைப்பிட்டி தேவாலயப் படுகொலைகளை வெளிக் கொணர்ந்த மதகுரு ஒருவர் மாயமாக மறைந்தமை உட்பட நாடாளுமன்ற உறுப்பினர், பத்திரிகையாளர்கள், மதகுருமார்கள், மாணவர்கள் எனப் பலர் காவு கொள்ளப்பட்டமை குறித்தெல்லாம் விசாரிக்கும்படி அந்த மனித உரிமைகள் குழு, சர்வதேச சமூகத்தை வேண்டியிருக்கின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றதை அடுத்து, அமைதி முயற்சிகள் குழம்ப, இந்தப் படுகொலைகள் தீவிரமடைந்தன என்ற உண்மையையும் அந்த அமைப்புச் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

இந்த விவகாரம் தொடர்பாக கடந்த மாதம் 4 ஆம் திகதி அரச ஊடகமான 'டெய்லி நியூஸ்' ஓர் அதிரடி அறிவிப்பை விடுத்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஹவானாவில் அணிசேரா மாநாட்டில் பங்குபற்றுவதற்காகவும், அமெரிக்காவில் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காகவும் புறப்பட இருக்கையில் அந்த அறிவிப்பு வெளியானது.

அதாவது, இலங்கையில் இடம்பெறும் இந்த மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து, சர்வதேச சமூகத்தின் கருத்துக்களை - அழுத்தங்களை - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாகவே எதிர்கொள்ளக் கூடிய சூழ்நிலை எழுந்த கட்டத்தில் அந்த அறிவிப்பு வெளியானது.

''நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இடம்பெற்ற ஆட்கடத்தல்கள், காணாமற் போதல், படுகொலைகள் என்பன குறித்து விசாரிப்பதற்கு சுதந்திரமான சர்வதேச ஆணைக்குழுவை அழைப்பதற்கு ஜனாதிபதி முடிவு'' - என்று அந்த அறிவிப்புத் தெரிவித்தது.

கடந்த மாதம் 12, 13 ஆம் திகதிகளில் பிரஸல்ஸில் கூடிய இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமைகளின் கூட்ட முடிவில் வெளியான கூட்டறிக்கை, சர்வதேச விசாரணைக் குழுவை அழைக்கும் இலங்கை அரசின் அந்த முடிவை வரவேற்றதோடு, அந்த முயற்சி தொடர்பாக இலங்கை ஜனாதிபதிக்கு முழு ஒத்துழைப்பும், வழிகாட்டலும் வழங்க இணைத் தலைமைகள் தயாராகக் காத்திருக்கின்றன என்றும் தெரிவித்தது.


ஆனால், சர்வதேச சமூகத்துக்குக் காதில் பூச்சுற்ற விடுக்கப்பட்ட அந்த அறிவிப்பு, அப்போதைய அறிவிப்போடு கிணற்றில் போட்ட கல்லாயிற்று. அதன் பின்னர் அது விடயத்தில் - சுதந்திரமான சர்வதேச விசாரணைக் குழு அமைக்கும் விடயத்தில் - காத்திரமான நடவடிக்கை ஏதும் இடம்பெறவில்லை. 'சுதந்திரமான சர்வதேச விசாரணைக்குழு' என்ற நிலைமை 'சர்வதேச பார்வையாளர்கள்' என்ற தரத்துக்கு - அதாவது உள்ளூர் விசாரணைகளைப் பார்வையிடும் சர்வதேசப் பிரதிநிதிகள் நிலைக்கு - கீழிறக்கப்பட்டு விட்டதாகவும் தகவல்.

இந்தப் பின்னணி நிலைமையிலேயே ஐ.நா. அமைப்புக்களை, இந்தச் சட்டவிரோதக் கொலைகள் தொடர்பான விவகாரங்களை விசாரிக்கும்படி இப்போது கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

துணை இராணுவப் படைகளால் அச்சுறுத்திக் கேட்கப்படும் கப்பப் பணத்தைச் செலுத்த மறுக்கும் சிவிலியன்களும் படுகொலை செய்யப்பட்டு வருகின்றார்கள் என்றும் மேற்படி மனித உரிமைகளுக்கான இல்லம், ஐ.நா. மனித உரிமைகள் அமைப்புகளிடம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

ஜெனிவாவில் தற்போது நடைபெறும் - உலகின் மனித உரிமைகள் தொடர்பான - ஐ.நாவின் உயர் மட்ட மாநாட்டில் இலங்கையின் இந்த விவகாரம் விரிவாக ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மனித உரிமைகளை மோசமாக மீறும் செயல்களில் ஈடுபடும் தரப்புகளுக்கு 'சூடு' கொடுக்கும் வகையிலான அறிவிப்புகள் ஜெனிவா கூட்டத் தொடரின் முடிவில் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



# முதியோர் தின நிகழ்வு

முதியோர் தினமான ஒக்ரோபர் முதலாம் திகதி செயற்திறன் அரங்க இயக்கத்தின் (ஏ.ரி.எம்.) சார்பில் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தில் முதியோர் தின நிகழ்வு இடம்பெற்றது. கைதடி, நாவற்குழி பகுதிகளில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த சுமார் 150 முதியவர்கள் இந்த நிகழ்வில் பங்கு பற்றினர். 'உடல் உள ஆரோக்கியமும் மகிழ்ச்சியான முதுமையும்' என்ற தொனிப் பொருளில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டதாக ஏ.ரி.எம். திட்ட முகாமையாளர் தெரிவித்தார்.

எமது முதுசங்களான முதியவர்கள் சமூகத்தால் கவனிக்கப்படாது ஒதுக்கப்படும் சூழல் அதிகரித்துவரும் இன்றைய



நிலையில், முதியவர்களிடம் தன்னம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களை சமூகத்தில் முன்கொண்டுவருவதே இதன் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

முதியோர்தின நிகழ்வில் கலந்துகொண்ட சிலர் பாரம்பரிய கலை வடிவங்கள் குறித்து ஏனையவர்களுக்கு வெளிப்படுத்துவதையும் ஏ.ரி.எம். செயலாளிகள் முதியோர் தினத்திற்காகத் தாம் உருவாக்கிய பாடலைப் பாடுவதையும் படங்களில் காணலாம்.

# பாடசாலையில் தங்கியுள்ளவர்களுக்கு வாரத்தில் இரு நாள் மருத்துவ முகாம்

தென்மராட்சி,ஒக்.4

மிருசுவில் வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தங்கியுள்ள மக்களின் நலன் கருதி கொடிகாமம் மத்திய மருந்தகத்தினர் வாரத்தில் இரு நாள்கள் பாடசாலைக்குச் சென்று மருத்துவ முகாமினை நடத்திவருகின்றனர்.

வாரத்தில் திங்கள், வியாழன் ஆகிய நாள்களில் மிருசுவில் குறிச்சி கந்தசாமி கோயில், மிருசுவில் வடக்கு அ.த.க.பாடசாலையில் தங்கியுள்ள மக்களுக்கு மத்திய மருந்தக பொறுப்பதிகாரி டாக்டர் வி.ஆறுமுகம் தலைமையில் சென்று மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது.

இந்த இடங்களில் தங்கியுள்ள மக்கள் மத்திய மருந்தகத்திற்கு வரமுடியாததால் மருந்தகத்தினர் அங்கு சென்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ப)

## சுகாதாரத் திணைக்களத்தின் கண்காணிப்புக் குழுக் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ். சுகாதாரத் திணைக்களத்தின் மாதாந்த கண்காணிப்புக்குழுக் கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இதில் சகல நிறுவனத் தலைவர்களையும் கலந்துகொள்ளுமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (203)

## புதிய சமுர்த்தி அலுவலர் நியமனம்

நவாலி, ஒக்.4

ஆனைக்கோட்டை ஜே.133 கிராம சேவையாளர் பிரிவின் சமுர்த்தி உத்தியோகத்தராக எஸ்.பாஸ்கரன் கடந்த வாரம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கு பணிபுரிந்த யுகுண ஜீவி வேறு பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(ப-100)

## விவசாயிகளுடனான கலந்துரையாடல்

வலி.தென் மேற்கு, ஒக்.4

பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்தினால் இவ்வருட காலபோக நெற்செய்கை தொடர்பான விவசாயிகளுடனான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று கடந்த வாரம் நடைபெற்றது.

சம்மேளனத்தின் தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கீரிமலை மற்றும் தொல்புரம் கமநல சேவை நிலையங்களின் பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சா.குகனேசன் கலந்து கொண்டு விவசாயிகள் காலபோக நெற்செய்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் பற்றி கேட்டறிந்து கொண்டார். கட்டாக்காலி ஆடு, மாடுகளை பிடிப்பதற்கு பிடிகாரர் ஒருவர் இக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்பட்டள்ளார். (ப-135)

# இரத்தினபுரி மாவட்டத்தில் மண்சரிவு ஏற்படும் அபாயம்

பலாங்கொடை, ஒக்.4

இரத்தினபுரி மாவட்டத்தில் மண்சரிவுகள் ஏற்படும் அபாயம் ஏற்கனவே உருவாகியுள்ளது என்று கட்டடத்துறை ஆராய்ச்சி நிறு வனம் எச்சரித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் இவ்வாறான பத்துக்கும் மேற்பட்ட இடங்கள் நிபுணர்களால் கண்டறியப்பட்டுள்ளன. இதேவேளை, சில தினங்களுக்கு முன் இரத்தினபுரி - ஹெல உடகந்த பகுதியில் பெரும் மண்சரிவு இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, கலவான, நிவித்திகல, காவத்தைப் பகுதியிலும் இந் நிலைமைகள் ஏற்படலாமெனவும் இந் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஏற்கனவே, மண்சரிவு இடம்பெற்ற பல இடங்களில் பொதுமக்கள், அதிகாரிகளின் அறிவுறுத்தல்களையும் உதாசீனம் செய்து தொடர்ந்து குடியிருந்து வருகின்றனர்.

எனவே, இப்பகுதியில் மண் சரிவுகள் ஏற்படலாமென அடையாளப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் மட்டுமன்றி ஏற்கனவே மண் சரிவு ஏற்பட்ட பகுதிகளில் வாழும் மக்களும் அவதான மாக இருக்க வேண்டுமெனவும் அறி வுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இப்பகுதியில் பெய்து வரும் தொடர் மழை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக பலாங்கொடை முதல் அப்புத்தளை வரையிலான வீதியின் மேட்டுப் பாங்கான பகுதியின் பல இடங்களிலும் மண் சிதைவுகள் ஏற்பட்டுள்ளதுடன் புதிய நீரூற்றுக்களும் ஏற்பட்டுள்ளன.

ஏற்கனவே, பாரிய சரிவுகள் ஏற்பட்டு உயிர்ப் பலிகள் ஏற்பட்ட இப்பகுதியில் மேலும் மண் சரிவுகள் ஏற்படுவதுடன் பாறாங்கற்கள் பிரதான வீதியை நோக்கி உருளும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

மேலும், இப்பகுதியில் அதிகாலை மற்றும் மாலை, இரவு நேரங்களில் வீதியில் வழுக்கும் தன்மையும், பனிப் படலமும் படர்வதால் பயணிகள் அவதானத்துடன் செல்ல வேண்டுமெனவும் போக்குவரத்துப் பொலிஸார் அறிவுறுத்துகின்றனர். (க)

# மூதூர், பொத்துவில் சம்பவங்களுக்குரிய நியாயமான தீர்வை ஜனாதிபதி தரவேண்டும்

## பாயிஸ் எம்.பி.வலியுறுத்து

கொழும்பு,ஒக்.4

''மூதூர் முஸ்லிம்களின் இடம்பெயர்வு மற்றும் பொத்துவில் முஸ்லிம்களின் படுகொலை என்பவற்றுக்கு ஜனாதிபதி தலையிட்டு நியாயமான தீர்வை பெற்றுத்தர வேண்டும்.''

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கே.ஏ.பாயிஸ் தெரிவித்தார்.

போருக்கெதிரான சமாதான முன்னணி உறுப்பினர்களுடன் இணைந்து, கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதியை அலரி மாளிகையில் சந்தித்தபோது, அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார். சுமார் ஒரு மணித்தியாலம் நீடித்த கலந்துரையாடலின் போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

மூதூர் முஸ்லிம்கள் துண்டுப்பிரசுரம் ஒன்றின் காரணமாக மீண்டும் இடம்பெயர ஆரம்பித்திருக்கின்றனர். இது மூதூர் பிரதேசத் தில் நிலவுகின்ற பயம், பீதி என்பவற்றினாலேயே ஏற்பட்டிருக்கிறது. அங்கு வாழும் முஸ்லிம்களோடு வாழுகின்ற தமது சமூகம் இன்னும் தமது வாழ்விற்கு திரும்பாத நிலை காணப்படுகிறது.

சம்பூர் பிரதேச தமிழ் மக்கள் இன்னும் இடம்பெயர்ந்த நிலையிலிருக்கின்றனர். மூதூர் பிரதேச வியாபார நடவடிக்கைகள் முற்றிலும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. ஒட்டுமொத்தமாக மூதூர் பிரதேசத்தின் இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது. இந்நிலையிலேயே பயம், பீதியுடன் வாழுகின்ற மக்கள் சிறு விடயங்களுக்கும் இடம்பெயருகின்ற நிலைமை உருவாக ஆரம்பிக்கிறது.

எனவே, இவ்விடயத்தை மனிதாபிமானத்துடன் நோக்கவேண்டும். இடம்பெயர்ந்து செல்லும் மக்களை பலவந்தப்படுத்தி அவர்களின் விருப்பத்திற்கு மாறான தீர்வுகளைத் திணிக்கக்கூடாது.

பொத்துவில் பிரதேசத்தில் ஆயுதம் ஏந்தாத அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். இதன் சூத்திரதாரிகள் சம்பந்தமாக அம்மக்கள் தமது சந்தேகங்களை வெளிப்படுத்துகின்றனர். இவ்விடயத்தில் நியாயமான விசாரணை ஒன்றை நடத்தி குற்றவாளியாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கு யுத்தத்தில், யுத்தத்தை வெறுக்கின்ற முஸ்லிம் மக்கள் இவ்வாறான பாதிப்புகளை எதிர்நோக்குவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இது விடயத்தில் ஜனாதிபதி அவர்கள் நேரடியாகத் தலையிட்டு நியாயத்தைப் பெற்றுத்தர வேண்டும் - என்றார்.

இச்சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜித சேனாரத்ன, மேர்வின் சில்வா, ரவிராஜ், மனோ கணேசன் மற்றும் வாசுதேவ நாணயக்கார, குமார் ரூபசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**பாலசிங்கம் சண்முகநாதன்**

மண்ணில்
16.01.1960

விண்ணில்
21.08.2006

ஆறாத் துயரில் எம்மை விட்டுப் பிரிந்த எம் குடும்பத் தலைவர் இறந்த செய்தியறிந்து நேரிலும், தொலைபேசிமூலமும் அனுதாபம் தெரிவித்தும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும் (54122)

விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு.

தனகாந்தலெட்சுமி (மனைவி), நியந்தி, பிரகாஸ், சிவதர்ஷன் (பிள்ளைகள்).

## நீங்காத நினைவுகளில் ஆறாண்டுகள்

மலர்வு
06 - 10 - 1962



உதிர்வு
24 - 09 - 2000

அமரர் **வீரசிங்கம் உதயகுமார்** (B.Sc.)

[ஆசிரியர், யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை]

திதி: 04.10.2006

வைகறையின்றி வருந்திய ஆறாண்டில்
வஞ்சனையுலகில் வலுவற்றோராய் வழிபார்த்து
வாழும் விழுதுகள் நாம் விழியின் கண்ணீருடன்
வானத்தைப் பார்க்கின்றோம் ஒரு பொழுதாவது
விண்மீன்களிடையாவது தெரிவீர்களோ என்று
எத்தனை இரவுகள் விடிந்தாலும் நீங்களின்றி
இரவுகள் விடிவதே பிடிப்பதில்லையப்பா - எம்
பாசக் கோட்டையின் காவல் தெய்வமாய் நீங்களிருக்க
பாருள்ளவரை உங்கள் பெருமை காப்போமப்பா.

செங்குந்தா லேன், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (54120)

பிரிவால் துயருறும் **குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மணே நம

## 31ஆம் நாள் நினைவலைகள்

அன்னையின் மடியில்
19 - 10 - 1963



ஆண்டவன் அடியில்
04 - 09 - 2006

**திருமதி சுசீலா குணரட்ணம்**

கண்ணீரும் கம்பலையும் எமதாக்கி
காலனவன் கைப்பிடிக்கு நீயானாய்
காரிருளில் கணத்தில் எமைப்பிரிந்தாய்
தாயின்றிப் பாலகரைத் தவிக்கவிட்டு
தனிமைவழி நாட வயசும் வந்ததோ!
இனியொருகால் உம் வதனம் இங்கேகண்டு
இதம் பெறுதல் ஆகாதோ!
மாதமொன்றாயினும் ஆறுதில்லை எம் மனசு.
உன் ஆன்மா ஈடேற பிரார்த்திக்கின்றோம்

"சுசி வாசா" நீர்வேலி மத்தி, நீர்வேலி.

உன் பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதரர்கள், மைத்துனிமார், மருமக்கள், உற்றார், உறவினர்கள்


## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**

இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

### மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2006

பதிவுகளிற்கு முந்துங்கள்

**80% OFF**

| பாட நெறிகள் | | | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | [illegible] | 1,650 |
| Honours Diploma in Computer Science | - 5மாதம் | [illegible] | 2,100 |
| Diploma in Web Page Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | [illegible] | 1,450 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| Accounting Package | - 3 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| MS Office | - 3 மாதம் | [illegible] | 1,000 |

*50% Off*
*Advances Courses*

Diploma in Video Editing ~~6500~~ 3250
Diploma in Multimedia ~~5500~~ 2750

வகுப்புக்கள் ஆரம்பம் :-
Batch I - 07/10/2006
Batch II - 08/10/2006
Batch III - 09/10/2006
Batch IV - 14/10/2006

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

3 மாதகால Diploma in Computerized Accounting & Tally புதிய பிரிவுகள் ஆரம்பம்.
ஆரம்பம். Batch I :- 07/10/2006, Batch II :- 08/10/2006


## கிராமசேவையாளர் அலுவலகம் இடம்மாற்றம்

நவாலி கிழக்கில் தனியார் வீடொன்றில் இயங்கிவந்த ஜே/135 கிராம சேவையாளர் அலுவலகம் நவாலி முருகமூர்த்தி ஆலயத்திற்குச் சமீபமாக அமைந்துள்ள பொது மண்டபமொன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(203-100)

## பயிர்விதை இன்மையால் விவசாயிகள் கஷ்டம்

உடுப்பிட்டி, ஒக்.4

வடமராட்சிப் பகுதியில் சிறுபயிர்ச் செய்கையாளர்கள் விதைகள் மற்றும் நாற்றுகள் பெறுவதில் பெரும் சிரமப் படுகின்றனர்.

தற்போது இடை இடையே மழை பெய்து வருவதால் சிறுபயிர் செய்கையாளர்களுக்கு பயறு, பாவல், வெண்டி, கத்தரி, புடோல், அவரை, பூசணி போன்றவைக்கான விதைகளும் நாற்றுக்களும் தேவைப்படுவதாகத் தெரிகின்றது.

இவ் விதைகள் விவசாய பொருள் வர்த்தக நிலையங்களில் கிடையாமையால் உற்பத்தியாளர் பெரும்பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

(ப-155)

## மணமகன் தேவை

1971இல் பிறந்த உயர்கல்விகற்று இலங்கையில் தொழில்புரியும் விவாகரத்துப் பெற்ற பிள்ளைகளில்லாத 5' 7'' உயர இந்துப் பெண்ணுக்கு உள்நாட்டு/வெளிநாட்டு மணமகன் தேவை. தொடர்புகளுக்கு: தொ.பே : 081 4923982

## குடும்ப அட்டைகள் மீள் ஆய்வு

நவாலி, ஒக்.4

ஆனைக்கோட்டை ஜே/133 கிராமசேவையாளர் பிரிவில் சகலவித குடும்ப அட்டைகளும் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இதுவரை இதனை மீளாய்வு செய்து கொள்ளாதவர்கள் உடன்வந்து கிராமசேவையாளர் அலுவலகத்தில் மீளாய்வு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (100)

## மூன்றாம் கட்ட பங்கீட்டு கொள்வனவை பெறாதவர்களுக்கான அறிவுறுத்தல்

நல்லூர், ஒக்.4

பங்கீட்டு அட்டைக்கான மூன்றாம் கட்ட உணவுப்பொருள்களைப் பெற்றுக்கொள்ளாத யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவைச்சேர்ந்தவர்கள் தமது பகுதி கிராமஅலுவலர்களுடன் தொடர்புகொண்டு அனுமதி பெற்று தமது ப.நோ.கூ.சங்கக் கிளைகளில் தமக்குரிய பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதுவரை தமக்குரிய மண்எண்ணையைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கும் யாழ். ப.நோ.கூ.சங்க கிளைகளூடாக மண்எண்ணை வழங்கப்படவுள்ளதாகவும் தமது பகுதிக் கிளைகள் மூலம் மண்எண்ணையைப் பெற்றுக் கொள்ளுமாறும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(100)

## வீதி திருத்தப்பட்டது

நவாலி, ஒக்.4

நீண்ட பல காலமாகத் திருத்தம் செய்யப்படாமல் சேதமடைந்திருந்த ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியிலிருந்து செல்லும் சிவன் வீதி தற்போது தார் இட்டு திருத்தி அமைக்கப் பட்டுள்ளது.

(100)


## விமானசேவை

கொழும்பு - யாழ் விமானசேவை
(சிறுவிமானம்) தினசரி உடனடிப் பயணம்
தொடர்பு : 0775443548
0114900438



## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**

இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

### ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Micro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 09/10/2006 - 09.00

3 மாதகால Diploma in Computerized Accounting & Tally புதிய பிரிவுகள் ஆரம்பம்.
ஆரம்பம். Batch I :- 07/10/2006, Batch II :- 08/10/2006


## நீங்காத நினைவலைகள்

| 2 ஆம் ஆண்டு | 11 ஆம் ஆண்டு |
|---|---|
|  |  |
| அமரர் **கார்த்திகேசு தெய்வேந்திரம்** | அமரர் **தெய்வேந்திரம் பாலாமணி** |
| 27.01.1928 - மலர்வு | - 19.06.1928 |
| 13.10.2004 - உதிர்வு | - 04.10.1995 |

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து
பாரினிலே எமைப்பெற்று வாழவைத்த தெய்வங்களே!
பாதியிலே எமை விட்டுச் சென்றதேன்?
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறவில்லை எம்துயர்.

அ.றோசா, 46/1, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (54130)

உங்கள் நினைவில் வாழும்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### பெரியதம்பி கணேஷ்



*(இளைப்பாறிய Foreman, சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)*

கலைமகள் றோட், காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், ஊரிக்காடு வல்வெட்டித் துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி - கணேஷ் 01.10.2006 ஞாயிற்றுக் கிழமை வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக்கணவரும் சந்திரிகா(விரிவுரையாளர், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி) தாரகா (ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர் மடம், வவுனியா) குகநேசன் (லண்டன்) ரேணுகா (நைஜீரியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேந்திரன் (விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை), கருணைநாதன் (விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர், வவுனியா), சுபோதினி (லண்டன்), கருணாகரன் (நைஜீரியா) ஆகியோரின் அன்பு மாமனும் கமலேஸ்வரி - ஞானமூர்த்தி (கொழும்பு-5) அவர்களின் அன்புச் சகோதரனும் விமலினி, துவாரகன், வைஷ்ணவி, தணிகைபாலன், பவித்திராஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.10.2006 ஞாயிற்றுக் கிழமை மு.ப.11மணியளவில் கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கிழக்கு, ஆலடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கு. (54129)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓகஸ்ட் மோதலின் பின் யாழ்.மாவட்டத்தில் 34 நலன்புரி நிலையங்கள் தோன்றியுள்ளன

யாழ்ப்பாணம், ஒக்.4

கடந்த ஓகஸ்ட் 11ம் திகதி யாழ்.மாவட்டத்தில் உருவான அரசு-புலிகள் மோதலைத் தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் சுமார் 34 நலன்புரி நிலையங்களில் மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ளார்கள். யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் வெளியிடப்பட்ட சுகாதாரம் சம்பந்தமான புள்ளிவிபரம் மூலம் இந்த விவரம் தெரியவந்துள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 நலன்புரி நிலையங்களும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 நலன்புரி நிலையங்களும், யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 நலன்புரி நிலையங்களும் இயங்கிவருகின்றன.

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இயங்கும் நலன்புரி நிலையங்களுக்கான நடமாடும் வைத்திய சேவையினை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். திருச்சிலுவை கன்னியர் வைத்திய நிலையம் மற்றும் ஏ.டி.ரி நிறுவனம் ஆகியவையும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இயங்கும் நலன்புரி நிலையங்களுக்கான நடமாடும் வைத்திய சேவையினை தமிழர் புனர்வாழ்வுக்கழகம், ஏ.டி.ரி நிறுவனம் கரவெட்டி மத்திய மருந்தகம் ஆகியவற்றுடன் மகப்பேற்று மனைப்பொறுப்பு வைத்திய அதிகாரியும் இணைந்து நடத்தி வருகின்றனர்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இயங்கும் நலன்புரி நிலையங்களுக்கான நடமாடும் வைத்திய சேவையினை இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்துடன் கொடிகாமம் மத்திய மருந்தகம் மற்றும் மகப்பேற்று மனைப்பொறுப்பதிகாரி இணைந்து வாரந்தோறும் நடத்தி வருகிறார்கள்.

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கு சாவகச்சேரி பிரதேச சபையும், நகர சபையும் குடிநீரை வழங்கி வருகின்றன. கரவெட்டி பிரிவிலுள்ள நலன்புரி நிலையங்களுக்கான நீர் விநியோகத்தை கரவெட்டி பிரதேச சபையும், யாழ்ப்பாண பிரிவிலுள்ள நலன்புரி நிலையங்களுக்கு யாழ்.மாநகரசபையும் குடிநீரை விநியோகித்து வருகின்றன.

இதேவேளை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள நலன்புரி நிலையங்களின் பாவனைக்கென 430 பிளாஸ்ரிக் வாளிகளும், யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள நலன்புரி நிலையங்களின் பாவனைக்கென 20 பிளாஸ்டிக் வாளிகளும் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப் பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ப-51)

## வடமராட்சியில் நியாயவிலைக்கே மருந்துகள்

வடமராட்சி,ஒக்.4

வடமராட்சி பிரதேசத்தில் மருந்து வகைகள் நியாய விலைக்கே விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அசாதாரண சூழ்நிலை குடாநாட்டில் ஏற்பட்டதை அடுத்து மக்களின் பாவனைப் பொருள்கள் அனைத்துமே கிடுகிடுவென விலை உயர்ந்ததுடன் அவற்றுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டது.

ஆனால், இப்பிரதேசத்திலுள்ள தனியார் மருந்து விற்பனை நிலையங்களில் மருந்து வகைகள் நியாய விலைக்கே விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

எனினும் கையிருப்பில் உள்ள மருந்து வகைகள் விற்றுத் தீர்ந்ததும் புதிதாக மருந்து வகைகள் வந்து சேர்வது சாத்தியமில்லை என தனியார் மருந்து விற்பனை நிலையத்தினர் தெரிவித்தனர். பணிப்பாளர் அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

(ப-173)

## மருந்துகள் நேரடியாகக் கொண்டு சென்று விநியோகம்

வலி.தென்மேற்கு, ஒக்.4

யாழ்.சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக்களஞ்சிய பிரிவு இவ்வருட மூன்றாம் கந்தாயத்திற்கான (காலாண்டுக்கான) மருந்து வகைகளை யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகள், அரசினர் மத்திய மருந்தகங்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு திணைக்கள லொறி மூலம் நேரடியாகக் கொண்டு சென்று வழங்கிவருகின்றது.

இதன் பிரகாரம் கடந்த வாரம் சங்கானை அரசினர் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலை, மானிப்பாய் அரசினர் வைத்தியாசலை, தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகம், இளவாலை அரசினர் மத்திய மருந்தகம் ஆகியவற்றுக்கு மருந்து வகைகள் நேரடியாகக் கொண்டு சென்று வழங்கப்பட்டுள்ளன. இதனை அடுத்து இவ் வைத்தியசாலைகளில் நிலவி வந்த மருந்து தட்டுப்பாடு நீங்கியுள்ளது. (ப-135)



*மானிப்பாயில் இம்மாதம் முதலாம் திகதி படையினர் மருத்துவ முகாம் ஒன்றை நடத் தினர். அதன்போது எடுக்கப்பட்ட படம்.*

## தத்துக்கொடுக்கப்படவுள்ள இரு ஆண்குழந்தைகள்

தென்மராட்சி, ஒக்.4

சாவகச்சேரி நீதிமன்றின் பொறுப்பில் உள்ள இரு ஆண்குழந்தைகள் தத்துக்கொடுக்கப்படவுள்ளன.

குழந்தைகளைத் தத்துக் கொடுப்பதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 14ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே விண்ணப்பம் அனுப்பி நேர்முகப்பரீட்சையில் கலந்துகொண்டு குழந்தை கிடைக்காத குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் இந்த நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் செ.விக்கினேஸ்வரமூர்த்தி அறிவித்துள்ளார்.

சாவா-இல4, சாவா-இல5 ஆகிய இரு ஆண்குழந்தைகளே தத்துக்கொடுக்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203)

## விளக்கொளியில் இரவு சேவைகள்; பரு. வைத்தியசாலையின் நிலைமை

உடுப்பிட்டி, ஒக்.4

மண்ணெண்ணை விளக்கில் இரவுசேவை செய்யும் நிலை பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியாசாலையில் ஏற்பட்டுள்ளது.

வடமராட்சியின் பிரதான வைத்தியசாலையாக விளங்குவது பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையாகும்.

இவ்வைத்தியசாலையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதன் காரணமாக மிகமிக அத்தியாவசிய சேவைகளைத் தவிர ஏனைய இரவு சேவைகள் அனைத்தும் மண்ணெண்ணை விளக்கிலேயே நடைபெறுகின்றன. இதனால் பல அசௌகரியங்கள் நோயாளர்களுக்கும், வைத்தியர்களுக்கும் ஏற்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட இராணுவ உயரதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டி எரிபொருள் கேட்டுள்ள தாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ப-155)

## 'பையோ ரெக்' அறிமுகப்படுத்தியுள்ள புதியரக பானங்களும் எண்ணெய்யும்

நல்லூர், ஒக்.4

யாழ்ப்பாணம் பையோ ரெக் நிறுவனம் புதிதாக முந்திரிகைப்பழரசம், றைவ் வைன், சுகர் வைன், வினிகர் 'ஹெயர் ஒயில்' என்பவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

தற்சமயம் முந்திரிகைப்பழ உற்பத்தி அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து இந்தப் பானங்களையும் ஹெயர் ஒயிலையும் நிறுவனம் தயாரித்துள்ளது.

நீண்ட ஆய்வுகளின் பின்னர் தயாரிக்கப்பட்ட கிறேப்யூஸ், றைவ் வைன், சுகர் வைன் என்பன நீரிழிவு, இருதய வியாதிகளுக்கு உகந்தது என மேற்படி நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத்தலைவர் தெரிவித்தார்.

தரமான சமயலுக்கு வினிகர் பயன்படுத்தப்படலாம் என்பதுடன், உடலில் காணப்படும் கலங்களை மீள் வளர்ச்சியுறச் செய்யவும் தலைமயிர் நரையைத் தடுக்கவும் ஹெயர் ஒயிலும் பயன்படும் எனவும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

(ப-111)

## கொடிகாமத்துடன் பஸ்களை நிறுத்துவதால் தென்மராட்சி கிழக்கு மக்கள் கஷ்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.4

யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் 769ஆம் இலக்க பஸ் சேவைகள் கொடிகாமத்துடன் நிறுத்தப்படுவதால் தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் தமது குடியிருப்புகளுக்குச் செல்கின்றனர்.

கொடிகாமம் சந்திக்கு அப்பால் ஏ-9 வீதியில் எந்தவொரு வாகனமும் செல்ல அனுமதிக்கப்படாததால் பயணிகள் வாகனங்களில் வருவோர் கொடிகாமத்தில் இறங்கி வேறு வீதிகள் ஊடாக சுமார் ஏழு கிலோ மீற்றர் தூரம் வரை நடந்தும், மிதிவண்டிகளிலும் செல்கின்றனர்.

விடத்தற்பளை, உசன், கெற்பேலி, பாலாவி, போக்கட்டி, தவசிகுளம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப)

## வீதி விவரங்கள் திரட்டப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஒக்.4

நாடெங்குமுள்ள மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை ஆகியவற்றின் வீதி விவரங்களை நிதி ஆணைக்குழு திரட்டவுள்ளது.

உள்ளூராட்சி மாநகரசபை அமைச்சின் மேலதிக செயலாளர் எம்எல்எஸ்.பெர்ணாண்டோ இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தின் கீழ் வரும் தார் வீதி, கிரவல் வீதி, முழு வீதி நீளம் மற்றும் உள்ளூராட்சி சபையின் பரப்பளவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே தகவல் திரட்டப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 13 பிரதேசசபைகள், 3 நகர சபைகள் என்பவற்றின் விபரங்களை உடன் திரட்டி வீதிவிபரங்களை வழங்குமாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி.ம.வசந்தகுமார் சகல பிரதேச, நகர சபைகளையும் கேட்டுள்ளார். (ப-95)

## கால்நடை தீவனம் பெறுவதற்கு ஏற்பாடு

தென்மராட்சி, ஒக்.4

தென்மராட்சி பிரதேச கால்நடைகளுக்கான உணவுப்பொருள்களை அடுத்தமாத முற்பகுதியில் வழங்குவதற்கு பிரதேச கால்நடை அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

கால்நடை உரிமையாளர்கள் தேவைப்படுவோர் சாவகச்சேரியில் உள்ள கால்நடை வைத்தியர் பணிமனையில் பதிவுசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## ஆங்கில ஆசிரியர்களுக்கு மூன்று இடங்களில் பயிற்சி

அச்சுவேலி, ஒக்.4

ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சிநெறி இம்மாதம் நடுப்பகுதியில் பேராதனை ஆசிரிய கலாசாலை, மகரகம ஆசிரிய கலாசாலை, களுத்துறை பாஸ்துள்ரட்ட தேசிய கல்வியியற் கல்லூரி ஆகிய மூன்று இடங்களிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

2006ஆம் கல்வி ஆண்டுக்கான ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகள் ஜூலைமாதம் 24ம் திகதி முதல் இலங்கையில் உள்ள 11 ஆசிரிய கலாசாலைகளிலும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றன. ஆங்கல ஆசிரியர் பயிற்சி நெறியை எங்கே ஆரம்பிப்பது எவ்வளவு பேரை அனுமதிப்பது என்பது தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்வதில் இழுபறி நிலவிவந்தது.

ஆங்கில ஆசிரியர் பயிற்சிபெறாமல் இருக்கும் 400மேற்பட்ட ஆசிரியைகளுக்கும் மூன்று நிலையங்களிலும் பயிற்சி வழங்கப்படவுள்ளது. பயிற்சி பெறாமல் இருக்கும் ஆங்கில ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ்ப்பெண் ஆசிரியைகள் என்பதனாலும் தமது பிரதேசத்தில் உள்ள எந்த இடமும் தெரிவுசெய்யப்படவில்லை. தங்கியிருந்து பயிற்சிநெறியைத் தொடர்வதற்கு விடுதி வசதிகள் வழங்கப்படவுள்ளன.

(ப)

## சிறுவர் மகிழ்வகத்தில் இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வுகள்

சீடா மற்றும் உலகதரிசன நிறுவனங்களின் அனுசரணையுடன் சுகவாழ்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட சிறுவர்தின நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறுவர் மகிழ்வகத்தில் நடைபெற்றன.

செல்வன் வை.யுகதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். சிறப்பு விருந்தினர்களாக உலகதரிசன அமைப்பின் வடபிராந்திய இணைப்பாளர் கோலிஷன் மனுவல், சீடா நிறுவனத்தைச்சேர்ந்த ரி.ரி. மயூரன், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திருமதி சிவராஜா, வைத்திய கலாநிதி எஸ். சிவயோகம், சுகவாழ்வு நிறுவனத் தலைவர் எஸ்.டேமியன் ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக பிரதம விருந்தினர் நீதிபதி விக்னராஜாவும் ஏனைய பிரமுகர்களும் சிறுவர்களால் வரவேற்கப்பட்டு மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து சமாதான ஒளியை செல்வி இ.விமாலினி ஏற்றி வைக்க ஏனைய பிரமுகர்களும் சமாதான ஒளியை ஏற்றினார்கள். சிறுவர் சிறுமியர்களும் அணி அணியாகச் சென்று தீபமேற்றினர்.

பாடசாலைக்குச் செல்வதைத் தடுக்காதீர்கள், சிறுவர்களின் உரிமைகளை வழங்குங்கள், ஏ-9 பாதையைத் திறவுங்கள் போன்ற சிறுவர்களால் எழுதப்பட்ட செய்திகள் ஜனாதிபதிக்கு அனுப்பப்படவுள்ளதாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான மயூரன் தெரிவித்தார். சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ப-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத ஓராண்டு நினைவலையில்...



**அமரர் R.S. அரியரட்ணம்**

(ஓய்வுபெற்ற வங்கியாளர்,
இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்)

பாசத்தின் உறைவிடமே
ஆண்டொன்று சென்றாலும்
நீங்காது உன் நினைவு
மறையாது உன்வதனம்.

பிரிவுத் துயரில்:
**V.செல்வரட்ணம்**
ஏழாலை தெற்கு.

(54147)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 27 - 05 - 1931



உதிர்வு 04 - 09 - 2006

### அமரர் தம்பிராசா அந்தோனிப்பிள்ளை

(செபரட்ணம்)

அன்னையாய் தந்தையாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்ந்திட்ட எம் தந்தையே!
மாதம் ஒன்று சென்றாலும்
மாறாது எம் துயரம்
எத்தனை ஆயிரம் உறவுகள் தான் இருந்தென்ன
அப்பா என்றழைக்க
நீங்கள் இல்லையே எம் அருகில்
உங்கள் பூஞ்சோலையில் பூத்துக்குலுங்கிய மலர்கள்
வாடி வதங்குவது உங்களுக்குத் தெரியவில்லையா அப்பா?
எம்மை விட்டுப் பிரிந்தாலும் எங்கள் நினைவோடுதான் இருபீர்கள்
காலங்கள் மாறினாலும் காத்திரமாக நீங்கள்
எங்களோடு வாழ்ந்த காலங்கள் என்றும் மாறாது.

*எமது குடும்பத்தலைவரின் மரணச்செய்தி அறிந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் பல வழிகளில் உதவிகள் ஒத்தாசைகள் வழங்கிய உறவினர்கள் நண்பர்கள் அயலவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

என்றென்றும் நினைத்துருகும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்

(54141)

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 03 ★ 10 ★ 1924



ஆண்டவன் அடியில் 14 ★ 10 ★ 2005

அமரர்

### திருமதி அன்னம்மா அப்பாக்குட்டி (குட்டி ஆச்சி)

(புங்குடுதீவு - 6 ஆம் வட்டாரம்)
திதி 04.10.2006

அம்மா!
நாம் வளர்வதற்காய் - நீ
உன்னை தேய்த்துக் கொண்டாய்
நிலவு வளர்ந்துதான் ஒளிவீசும்
நீயோ தேய்ந்து ஒளிதந்தாய்....
உன் சுவாசம் எங்கள் பெயரை மட்டுமா
உச்சரித்தது...?
உன் ஊரின் பெயரையும் அல்லவா
அது உச்சரித்தது....
தமிழுக்கும் எம் வாழ்வுக்கும்
உயிர்தந்தாய்
இன்று நீயில்லை...
அம்மா...
நீ ஊட்டிய உணர்வும் - உன்
ஊக்கமும் எமை வாழ வைக்கும்
வானில் இருந்துன் மக்களை
வாழ்த்துவாய் அதனால் வாழ்கிறோம்...

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அரியநாயகபுல விநாயகரை வேண்டுகிறோம்.

*அ.சுந்தரலிங்கம்
162/3, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 4590948*

குடும்பத்தினர்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(54142)

## தவறிவிட்டது

கிட்டினன் கலாதரன் அவர்களின் தே.அ.அட்டை, வி.அ.அ. 621643045 V, 0902017389, மோட்டர் சைக்கிள் (லைசன்ஸ்) ஆவணங்கள் உட்பட கச்சேரிக்கும் நெடுங்குளம் சந்தி, அரியாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஐங்கரன் கொமினிக்கேசன் கண்டி வீதி, அரியாலை எனும் விலாசத்தில் கொடுக்கவும்.தொ.பே. 222 2794 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## IELTS

INTERNATIONAL ENGLISH LANGUAGE TESTING SYSTEM

அனேக பெற்றோர்களின் விருப்பத்திற்கு இணங்க புதிய ஒரு வகுப்பு 2.10.2006 இல் ஆரம்பிக்கபபட்டுள்ளது December 16 ஆம் திகதியில் நடைபெறும் IELTS பரீட்சையை இலக்காக கொண்டு December 10 ஆம் திகதி வரை திங்கள் தொடக்கம் வியாழன் வரை பகல் 12மணி முதல் 2மணிவரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. Listening practice மின்சாரம் இருக்கும் நேரங்களிலேயே செய்ய வேண்டி இருப்பதால் இந்த நேரம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

விரும்பியவர்கள் உடனே சேர்ந்து கொள்ளலாம். ஏற்கனவே சனி ஞாயிறு நாட்களில் நடைபெறும் வகுப்புக்கள் வழமைபோல நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு
**BRITISH COLLEGE OF ENGLISH**
141, ADIYAPATHAM ROAD,
THIRUNELVELY.

## IIS

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு I : 07.10.2006
பிரிவு II : 09.10.2006 } பகல் 10.00 மணி

**அனைத்து Diploma கற்கைநெறிகளுக்குமான பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.**

புலமைப்பரிசில் திட்டம் 2006 இல் தோற்றிய மாணவர்களும் இப்பிரிவில் இணைந்து கொள்ளலாம்.

இயக்குநர்
IIS, இல.100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

### மெய்வன்மைச் சங்க உறுப்பினர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ். மாவட்ட மெய்வன்மை தொழில் நுட்ப வியலாளர் சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்கான கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற வுள்ளது.

கொழும்புக்கு அனுப்ப வேண்டிய விண்ணப்பப்படிவம் தொடர்பாக இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது என சங்கச் செயலாளர் தெரிவித்தார். (1)

## மரண அறிவித்தல்கள்

### Dr.S.S. சேனாதிராஜா



யாழ்ப்பாணம், அத்தியடியைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமான **Dr.** சண்முகம் சேனாதிராஜா 02.10.2006 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி சத்தியவதியின் அன்புக் கணவரும் அமரர்காளன சின்னத்தம்பி சண்முகம், திருமதி மனோன்மணி சண்முகம் ஆகியோரின் பாசமுள்ள மகனும் காலஞ்சென்ற **Dr.** நாகலிங்கம் கோபாலப்பிள்ளை, காலஞ்சென்ற திருமதி சரஸ்வதி கோபாலப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் சித்திரா (லண்டன்), மீரா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பேரின்பநாதன் (லண்டன்), **Dr.** கதிர்காமநாதன் (லண்டன்) ஆகியோரின் மாமனும், வர்மன், பவான், சேயோன், சாயகி ஆகியோரின் பேரனும், பாலேந்திரன் (**Hari** - லண்டன்) பெரியப்பாவும் சிவபாக்கியம், காலஞ்சென்ற கனகலிங்கம், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், கமலாம்பிகை, சற்குருநாதன், சிவயோகேஸ்வரி, பற்குணநாதன், பத்மாவதி, வாமதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சுவாமிநாதன், தவனேஷ், நித்தியானந்தன், ஜனகன், றஞ்சிதமலர், சறோஜினிதேவி, றாஜகுமாரி, சவுந்தரரேஸ்வரி, றஜிகலா ஆகியோரின் மைத்துனரும் மற்றும் தேவதாஸ் (லண்டன்), **Dr.**சங்கரநாரயணன், ஞானி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொ.பே.: 00442084249724
(லண்டன்)*

தகவல்:
**வி.நித்தியானந்தன்
(மைத்துனர்)**

(54148)

### சுப்பிரமணியம் நேசம்மா



கனகசபை வீதி, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் நேசம்மா அவர்கள் நேற்று(03.10.2006) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (**Estate Suprintendent**) அவர்களின் அன்பு மனைவியும் பிரபல சிங்கள ஆசிரியர் லீலா கிருஷ்ணன் (**J.P.**), காலஞ் சென்றவர்களான சித்தாராணி, நடனராணி மற்றும் சந்திரலேகா ஆகியோரின் அன்புத் தாயும் பாலகுமார்(லண்டன்), சுந்தர்(மின் இணைப்பாளர்) ஆகியோரின் அன்பு மாமியும் சுரேக்கா, சோபிகா, ராதிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(04.10.2006)புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கனகசபை வீதி,
மானிப்பாய்.*

தகவல்:
**லீலாகிருஸ்ணன்
(பிரபல சிங்கள ஆசிரியர்- மகன்),
சுந்தர் பேனி மகள்.**

(54135)

### அப்புத்துரை செல்லம்மா

சுன்னாகம் சந்தை வளவைப் பிறப்பிடமாகவும் புகையிரத நிலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை செல்லம்மா நேற்று (03.10.2006) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அண்மையில் காலமான அப்புத்துரையின் அன்பு மனைவியும் இரமநாதன் (மலேசியா), வானதி,பவானி, கனகநாதன், நரேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் வசந்தாதேவி (மலேசியா), தம்பிராசா, தங்கராசா, சசிலா, சந்திரிகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான முருகேசு, புவனேஸ்வரி மற்றும் கந்தையா, ஆறுமுகம், குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2006) புதன் கிழமை பி.ப ஒரு மணிக்கு கொத்தியாலடி இந்து மயானத்தில் இடம் பெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**பிள்ளைகள்.**

## மீள் கேள்வி அறிவித்தல்

26.07.2006 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டகேள்வி அறிவித்தலின் பிரகாரம் பின்வரும் வேலைகளுக்கு மீளக் கேள்விகள் கோரப் படுகின்றன

| இல. | வேலைவிவரம் | கேள்வி வைப்புப் பணம் | கேள்வி பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01 | சிற்பனை வீதி திருத்தம், வேலணை | 5300.00 | 1000.00 |
| 02 | நவக்கை வீதி திருத்தம், வேலணை | 5300.00 | 1000.00 |

கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் இறுதித்திகதி : 10.10.2006 பி.ப. ஒரு மணி
கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதி : 16.10.2006 பி.ப. ஒரு மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இறுதித்திகதி : 16.10.2006 பி.ப. 2 மணி

குறிப்பு:
01. இவ் வேலைகளுக்குத் தேவையான தாரினை ஒப்பந்தகாரரே தருவித்துப் பயன்படுத்த வேண்டும்.
02. மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்

**கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்,
செயலாளர்,பிரதேச சபை,
வேலணை.**

(51094)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் காவலரண் மீது முருங்கனில் தாக்குதல்!

## பதில் சூட்டில் ஒருவர் பலி; நால்வர் காயம்

மன்னார், ஒக்.4

மன்னார், முருங்கன் பொலிஸ் நிலையத்துக்குப் பின்பக்கமாக உள்ள பொலிஸ் காவலரண் மீது நேற்று அதிகாலை கிரனேட் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடு என்பன நடத்தப்பட்டிருக்கின்றன. அதனையடுத்து, பொலிஸார் பதிலுக்குத் துப்பாக்கி மற்றும் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

பொது மக்களின் குடியிருப்புப் பகுதிகள் மீதும் துப்பாக்கி ரவைகள் வீழ்ந்தன. இதன்போது, யுவதிகள் இருவர் உட்பட பொது மக்கள் நால்வர் படுகாயமடைந்தனர். நேற்று அதிகாலை 2 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து அப்பகுதிக்கு மேலதிக பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினரும், இராணுவத்தினரும் விரைந்து வந்தனர்.

அவர்கள் அப்பகுதியில் தேடுதல் நடத்தினர். அப்போது சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலத்தை அவர்கள் மீட்டனர். சில ஆயுதங்களும் அந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். இதில் பொலிஸார் எவரும் காயமடையவில்லை என்றும் பொலிஸாரின் இரு காவலரண்கள் சேதமடைந்தன எனவும்கூறப்பட்டது.

பொலிஸாரின் பதில் தாக்குதலில் காயமடைந்த பொது மக்கள் நால்வரும் நேற்றுக் காலை 6 மணியளவில் முருங்கன் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். உயிரிழந்த இளைஞரின் சடலமும் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. அந்தச் சடலம் நேற்று மாலை வரை அடையாளம் காணப்படவில்லை.

தாக்குதல் நடந்த பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு தங்கியிருந்த கட்டுமானப் பணியாளர்களான சிங்களவர்கள் 10 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த கட்டடத்தில் இருந்தே தமது காவலரண் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருப்பதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

மன்னார் அரச அதிபர் வி. விஸ்வலிங்கம் காயமடைந்தவர்களை வைத்தியசாலையில் பார்வையிட்டார். மாவட்ட மேலதிக நீதிவான் ரி.ஜே. பிரபாகரன் வைத்தியசாலைக்குச் சென்று உயிரிழந்தவரின் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணை நடத்தினார்.

## வன்னிப் பிரதேசப் பாடசாலைகளில் இன்று பகிஷ்கரிப்பும் பணிப்புறக்கணிப்பும்

கிளிநொச்சி, ஒக்.4

வன்னிப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இன்று பாடசாலைகளைப் பகிஷ்கரிக்க உள்ளனர். அனைத்துப் பாடசாலை ஆசிரியர்களும் இன்றைய தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவர்.

செஞ்சோலை வளாகத்தில் நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சில் காயமடைந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் அனுசரணையுடன், கண்டி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட மூன்று மாணவிகளையும் அரசாங்கமும் பொலிஸாரும் நடத்திய விதத்தைக் கண்டிக்கும் முகமாக இன்றைய பாடசாலைப் பகிஷ்கரிப்பு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி வைத்தியசாலையில் மாணவிகளுக்கு முறையான சிகிச்சை அளிக்கப்படாமை, சிகிச்சை பெற்ற மாணவிகளை அச்சுறுத்தி வாக்கு மூலம் பெற்றமை, அவர்களை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்து தனிமைப்படுத்தி வைத்தமை, அதனூடாக அவர்களுக்குப் போதிய வைத்திய வசதி கிடைக்காமல் தடுத்தமை, மரணமடைந்த ஒரு மாணவியின் சடலத்தை மேலதிக பரிசோதனை என்னும் பெயரில் பல நாள்கள் கழிந்தும் இன்னமும் பெற்றோரிடம் ஒப்படைக்காமல் இழுத்தடித்து வருதல் ஆகியவற்றைக் கண்டித்தும்-

ஏனைய இரு மாணவிகளை பெற்றோர்களிடம் ஒப்படைக்குமாறும் கோரியமைக்கு செவி சாய்க்காமல் தொடர்ந்து அரசு தடுத்து வைத்திருப்பதை ஆட்சேபித்துமே - இன்றைய மாணவர் பகிஷ்கரிப்பும் ஆசிரியர்களின் பணிப்புறக்கணிப்பும் நடைபெற உள்ளதாக-

வன்னி பெற்றோர், ஆசிரியர் சங்கங்களின் ஒன்றியமும் வன்னி மாணவர் ஒன்றியத்தின் அறிவித்துள்ளன.

## குடிதண்ணீரில் நஞ்சு கலந்ததால் நான்கு பேர் வைத்தியசாலையில்

### மட்டுவில் தெற்கில் நேற்றுச் சம்பவம்

தென்மராட்சி, ஒக்.4

மட்டுவில் தெற்கு பகுதி பொதுமக்கள் பயன்படுத்தும் குடிதண்ணீர் கிணற்றில் விஷமிகள் நஞ்சுத் திராவகம் ஊற்றியதால் காலையில் குடிதண்ணீரை எடுத்துச் சென்று குடித்த பொதுமக்கள் பலர் பாதிப்புக்கு உள்ளாகினர்.

இச்சம்பவம் நேற்று காலை இடம்பெற்றது.

காலை 7 மணியளவில் கிணற்றில் தண்ணீர் எடுக்கச்சென்ற ஆசிரியர் தண்ணீர்ரைக் குடித்தபோது நச்சுத் திரவக மணம் வீசியதும் இதனை அடுத்து அவர் ஏனையோரை தண்ணீர் எடுக்க விடாமல் தடுத்துள்ளார். இதனால் குறிப்பிட்ட கிணற்றில் குடிதண்ணீர் எடுக்கும் பலர் பாதிப்புக்கு உள்ளாகமல் தடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், அதிகாலையில் கிணற்றில் தண்ணீர் எடுத்துப் பயன்படுத்தியோர் பாதிப்புக்கு உள்ளாகி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதே இடத்தைச் சேர்ந்த செல்லையா தர்மேஸ்வரன் (வயது-52), நிர்மலகுமார் சுகுமார் (வயது - 26), இவரது மகளான சுகுமார் விதுஷா (வயது-05), ஆசிரியர் ச. கிருஷ்ணன் (வயது-45) ஆகியோரே மத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டவர்களாவர்.

இதனையடுத்து கிணறு இறைத்து துப்புரவு செய்யப்பட்டது.

## வாழைச் செய்கையாளருக்கு பலத்த காற்றினால் நஷ்டம்

கோப்பாய், ஒக்.4

கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இரவு திடீரென காற்றுடன் கூடிய பெருமழையால் நீர்வேலி, கோப்பாய்ப் பகுதிகளில் பெருமளவு வாழை மரங்கள் முறிந்து அழிவடைந்தன. இதனால் விவசாயிகள் பலரும் நஷ்டமடைந்துள்ளனர்.

இதே வேளை - சில வீடுகள், கடைகளின் கூரைகளும் காற்றினால் தூக்கியெறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (72)

## சிறுவர் தின விழா

சாவகச்சேரி, ஒக்.4

மட்டுவில் வடக்கில் இன்று சிறுவர், முதியோர் தின விழா நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மட்டுவில் வடக்கு சபீனா பாலர் பாடசாலை மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

'கியூடெக்' அமைப்பின் கிராமிய உயிர்ப்பூட்டல் குழு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. நிகழ்வில், சிறுவர்களால் முதியவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இறுதியாக சிறுவர், முதியவர்களின் கலை நிகழ்வுளும் இடம் பெறவுள்ளன. (31)

## ஆள்கடத்தல்கள் குறித்து அரசு கவனம் செலுத்தும்

கொழும்பு, ஒக்.4

கொழும்பில் ஆள்கடத்தல்கள் இடம்பெறுவதை ஒரு சாதாரண விடயமாகக் கருத முயாது என்பதால் அது குறித்து அரசு முழுக் கவனத்தை செலுத்தியிருப்பதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடகப் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல நேற்றுத் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஊடக நிலையத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டி லேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சர்வதேச சமூகத்தின் முன்னால் தோல்வியைச் சந்தித்துள்ள ஒரு தீவிரவாத இயக்கமொன்று அல்லது இயக்கங்கள் இந்தக் கடத்தல்களின் பின்னணியில் உள்ளன என்பதும் அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்கு அவை முயல்கின்றன என்பதும் தெரியவந்துள்ளன. தற்போது விசாரணைகள் நடைபெறுவதால் இதற்கு மேலதிகமாக ஒன்றும் கூற நான் விரும்பவில்லை.

இவ்வாறான சம்பவங்கள் குறித்து விசாரணைகளை நடத்துவதற்காக அரசு ஆணைக் குழுவொன்றை நியமித்துள்ளது. கொழும்பில் இதுவரை கடத்தப்பட்ட 30 பேரில் 27 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மிகுதி 3 பேர் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

-என்றும் அமைச்சர் ரம்புக்வெல சொன்னார்.

## எரிபொருள்களின் விலையை இன்னும் குறைக்க வலியுறுத்துகிறது ஐ.தே.க.

கொழும்பு,ஒக்.4

உலகச் சந்தையில் எரிபொருளின் விலை குறைந்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் அனைத்து மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் எரிபொருள்களின் விலையை மேலும் 2 ரூபாவால் குறைக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கியதேசியக் கட்சியின் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்றுக் கொழும்பில் நடந்தது. அந்த மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை தற்போது பெருமளவில் குறைந்துள்ளது. இவ்விலைக்குறைப்புக்கு ஏற்ப மேலும் 2 ரூபாவால் எரிபொருள் விலையை எமது நாட்டு மக்களுக்கு குறைத்து வழங்க முடியும்.

உலக நாடுகளில் மசகு எண்ணெயின் விலை குறைக்கப்பட்டிருப்பினும் இலங்கையில் எரிவாயு, மின்சக்தி போன்றவற்றின் விலைகள் உயர்த்தப்பட்ட நிலையிலேயே உள்ளன.

ஆகவே இவற்றின் விலை உயர்வை கட்டுப்படுத்தி மக்களின் வாழ்க்கைச்செலவைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி அத்தநாயக்க எம்.பி மேலும் தெரிவித்தார். (த)

## விதைப்புக்கு ஆயத்தம்

நவாலி, ஒக்.4

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதிகளில் அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு அப்பகுதி விவசாயிகள் வயல்களில் குப்பைகள் சிந்தி நிலத்தினை உழுது பண்படுத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். (ப-100)

## இம்மாதத்துக்குரிய மண்எண்ணெய்

நல்லூர், ஒக்.4

கிராம அலுவலர் இல.ஜே.106, ஜே.107, ஜே.108, ஜே.109 பிரிவுகளைச் சேர்ந்த குடும்ப அட்டைகளுக்கு கல்வியங்காடு தேவகுருநாதன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இம்மாதத்திற்குரிய மண்எண்ணெய் 2 லீற்றர் வழங்கப்படுகின்றது. (ப-111)

## ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் வெளிக்கள அலுவலர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.4

ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் சகல வெளிக்கள உத்தியோகத்தர்களையும் எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் அலுவலகத்திற்கு சமூகந்தருமாறு நிறுவனத்தின் யாழ். மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

முற்பணம் பெற்றுக் கொள்வது தொடர்பாக விற்பனை முகாமையாளரைத் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (202)

## அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஒக்.4

அமெரிக்க அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் லொட்ரி விசாவுக்கான (Green card) விண்ணப்பங்கள் இணையத்தளம் மூலம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் டிசெம்பர் 3 ஆம் திகதி வரை **www.dvlottery.state.gov** என்ற இணையத்தள முகவரி ஊடாக விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (202)

## கிணறு வற்றுவதால் தண்ணீர் தட்டுப்பாடு

நவாலி, ஒக்.4

நீண்ட காலமாக மழை இல்லாததன் காரணமாக ஆனைக்கோட்டை காசிகாண்ட மடம் சிவன் ஆலயத்தின் தண்ணீர்க்கிணறு நன்றாக வற்றிவிட்டது.

இதனால் இங்கு நல்ல தண்ணீர் பெற்றுச் செல்லும் நூற்றுக்கணக்கான மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

இன்னும் ஒருவாரத்தில் மழை பெய்யாது விடின் நீர் முற்றாக வற்றிவிடுமென்றும் பின்னர் நல்ல தண்ணீருக்கு வேறு இடங்களை நாடிச்செல்ல வேண்டுமென்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ப-100)

## பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம்,ஒக்.4

அரச சேவையில் இருந்து இளைப்பாறிச் செல்லும் ஜே/ 82 வண்ணார்பண்ணை கிராம சேவையாளரான பொ.தர்மபாலனுக்கு வண்ணார்பண்ணை மக்கள் பிரிவுபசாரவிழா ஒன்றை நடத்தியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவர் த.சகாதேவன் தலைமையில் பிரப்பங்குளம் வீதியில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் இவ்விழா நடைபெற்றது.

இதில் ஆசிரியர் இரா.செல்வவடிவேல் கிராம சேவையாளரை பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

நில அளவைத் திணைக்கள இளைப்பாறிய அத்தியட்சகர் எஸ். சுப்பிரமணியம், யாழ். லயன்ஸ்கழகத் தலைவர் ரி.ஆர். இரஞ்சன் மற்றும் சமாதான நீதிவான் எஸ். சண்முகரட்ணம், வண்ணார்பண்ணை கிராம அபிவிருத்திப் புனர்வாழ்வுக் குழுச் செயலாளர் தி.அமிர்தநாதன் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினர்.


**U.S.A VISA LOTTERY (DV-2008) (American Green Card)**

அமெரிக்க அரசினால் லொட்டரி விசாவுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. எனவே நீங்கள் 04.10.2006 - 03.12.2006 வரை எமது இணையத்தின் ஊடாக அனுப்பி வைக்கலாம்.

- கட்டணம் 200/=
- உங்களுக்கு அதிர்ஷ்டம் உண்டு.

ஒரு முறை விண்ணப்பித்து பாருங்கள்.

**C.B Computer Academy**
T.P No 021-4590291 Station Road, Kondavil

**உடன்தேவை**

சஞ்சிகை விநியோகஸ்தர்கள் (ஆண்/பெண்)
வயதெல்லை: 18 - 45, கல்வித் தகைமை: G.C.E. O/L
சம்பளம்: 6000 - 7000 வரை
விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**P.M.C** 54/B, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
*(வேம்படிச் சந்திக்கும் ஆரியகுளம் சந்திக்கும் இடையில்)*

**மோட்டார் சைக்கிள் தேவை**

சுப்பர்கப் லான்சர் (50 - 90)
அல்லது [illegible] தேவை.
தொடர்பு கொள்ளவும்
222 3605 (54145)


**துயர் பகிர்கின்றோம்**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆசிரிய கல்வியியலாளர் திருமதி சந்திரிகா நாகேந்திரன் அவர்களின் அன்புத் தந்தை

*பெரியதம்பி கணேஷ்*

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினரோடு நாமும் இணைகின்றோம். அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(54132) **யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிச் சமூகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஹன்சன் போவர் தலைமையிலான குழுவினருக்கும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது...

# தணிக்கைத் திட்டம் ஏதும் அரசுக்குக் கிடையதாம்!

கொழும்பு,ஒக்4

செய்தித் தணிக்கையொன்றை அரசு நடைமுறைப்படுத்தப் போவதாக வெளிவந்த செய்திகளை அரசு நேற்று முற்று முழுதாக மறுத்துள்ளது.

தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஊடக நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, அரசின் இந்த நிராகரிப்பு அறிவிப்பை வெளியிட்டார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:-

''ஊடகவியலாளர்களின் நன்மை கருதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாதுகாப்பு ஊடக நிலையம், ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தை ஒருபோதும் கட்டுப்படுத்தாது. செய்திகள் குறித்தும், செயற்பாடுகள் குறித்தும் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நாம் அடிக்கடி கலந்துரையாடுகிறோம். சில ஒத்துழைப்பு, வழிகாட்டல்களை வழங்குகின்றோம். இதன் மூலம் செய்தித் தணிக்கை அல்லது கட்டுப்பாடு வரப்போகிறது என்று அர்த்தப்படுத்த வேண்டாம். அவ்வாறான ஒன்றை ஏற்படுத்தும் நோக்கம் அரசுக்கு இல்லை.'' - என்றார் அவர். (உ)

# கச்சேரி- நல்லூர் வீதியில் 5 வீடுகளில் திங்களிரவு ஆயுதமுனையில் கொள்ளை

யாழ்ப்பாணம்,ஒக்.4

கச்சேரி - நல்லூர் வீதியில், கற்பகப்பிள்ளையார் ஆலயச் சூழலில் அடுத்தடுத்து அமைந்துள்ள 5 வீடுகளில் நேற்றுமுன்தினமிரவு ஆயுத முனையில் கொள்ளை இடம் பெற்றுள்ளது.

இந்த கொள்ளைச் சம்பவங்கள் குறித்து மேலும் சொல்லப்படுவதாவது:-

சம்பவதினம் இரவு 8.30 மணியளவில் கற்பகப்பிள்ளையார் ஆலயச் சுற்றாடலில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்றும்-

ஊரடங்கு வேளையில் திடீரென கேட்ட துப்பாக்கி வேட்டுக்களால் பீதியடைந்த மக்கள் மின்குமிழ்களை அணைத்துவிட்டு நேர காலத்துடன் நித்திரைக்குச் சென்று விட்டனர் என்றும் - கூறப்பட்டது.

இந்த நிலையில் - நள்ளிரவு 12.30 மணியளவில் ஒவ்வொரு வீடுகளுக்குள்ளும் தனித்தனியே உள்நுழைந்த ஆயுத தாரிகள் வீடுகளின் கதவுகளை துப்பாக்கியால் சுட்டு சேதப் படுத்தியுள்ளனர். பின்னர் வீட்டில் இருந்தவர்களைப் பயமுறுத்தி நகை, பணம் என்பனவற்றை அபகரித்துச் சென்றுவிட்டனர்.

குறிப்பிட்ட 5 வீடுகளிலும் இருந்து 10 லட்சம் பெறுமதியான நகைகள் மற்றும் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (139)

## ஜி.சீ.ஈ. உயர்தர பெறுபேறு இன்று இணையத் தளத்தில்

கொழும்பு,ஒக்.4

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று புதன் கிழமை நள்ளிரவு இணையத் தளத்தில் வெளியிடப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் இணை யத் தளமான www.doenets.lk என்ற முகவரியில் பெறுபேறு களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (203)

## ஆசிரிய கலாசாலை பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.4

ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை, முதலாம் வருடப் பரீட்சை என்பன இந்தமாத இறுதியில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட இடங்களில் நடத்தப்படவுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இது தொடர்பான ஏற்பாடுகளை தற்போது செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த ஆசிரிய மாணவர்களின் நலன் கருதி கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களிலும் விசேட பரீட்சை நிலையங்கள் நிறுவப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.

பூநகரி, பளை ஆகிய பகுதிகளிலேயே நேற்றைய குண்டுத் தாக்குதல்கள் இடம் பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது.(ஐ-12)

## ஒக். 28-30....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'அரசுத் தரப்புடன் ஒஸ்லோவில் 28 முதல் 30ஆம் திகதிவரை பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்'' என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் ஹன்சன் போவர் நேற்று நடத்திய சந்திப்புக்குப் பின்னர் பெயர் குறிப்பிடவிரும்பாத வட்டாரங்கள் தெரிவித்தன என்று ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

'இது சாதகமான தகவல்' என்று அரசுத் தரப்பின் மூத்த அதிகாரி ஒருவர் ரொய்ட்டரிடம் கூறியிருக்கின்றார்.

''பேச்சுக்காக புலிகள் குறிப்பிட்டிருக்கும் தினங்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒப்புதல் அளிக்கவேண்டியுள்ளது. இது தொடர்பில் சில தகவல்களும் எமக்குத் தேவையாக உள்ளன'' என்றும் அந்த அரசுத் தரப்பு அதிகாரி ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

## பேச்சு விடயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச சமூகத்தின் முன்னால் நல்லவர்களென காட்டிக்கொள்வதற்காகவே புலிகள் இவ்வாறு செய்கின்றனர்.

எனவேதான், இம்முறை பேச்சு விடயத்தில் புலிகளின் தலைவரின் உத்தரவாதத்தை அரசு எதிர்பார்க்கிறது. பேச்சுக்கான உத்தரவாதத்தை இணைத்தலைமை நாடுகளிடம் அல்லது அனுசரணையாளர்களிடம் அல்லது இலங்கை அரசிடம் புலிகளின் தலைவர் வழங்க வேண்டும்.

பேச்சு நடைபெறும் காலங்களில் புலிகள் ஆயுதக்கடத்தல் மற்றும் வன்முறைகளில் ஈடுபடக்கூடாதென்பதை நாம் அனுசரணையாளர்களிடம் வலியுறுத்தித் தெரிவித்துள்ளோம்.

இணைத்தலைமை நாடுகளின் அண்மைய கூட்டம் நடைபெற்றபோதே புலிகளின் ஆயுதக் கப்பலொன்று முல்லைத்தீவில் அழிக்கப்பட்டது. பேச்சுகள் என்ற போர்வையில் இவ்வாறான செயல்களில் புலிகள் ஈடுபடக் கூடும். பேச்சுகளை நடத்துவதற்கான இரு திகதிகளை அரசு குறிப்பிட்டுள்ளது. அதற்கான புலிகளின் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

- இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல. (ஐ-உ)

# கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டார்!

கொழும்பு, ஒக்.4

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடாதிபதி பி.பாலகுமார் வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகளினால் அவரின் வீட்டிலிருந்து கடந்த சனிக்கிழமை கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடத்தப்பட்ட பீடாதிபதி திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். தற்போது மட்டக்களப்பு சிங்கள மகாவித்தியாலய வீதியில் வசித்துவருகின்றார். ஒரு பிள்ளையின் தந்தை இவர்.

கடத்தப்பட்டவர் விடுதலை செய்யப்பட வேண்டுமானால் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பதவி விலகவேண்டுமென அந்த ஆயுதக் குழு தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இக்கடத்தல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ஐ-12)

## வலி.மேற்கு தவிர்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்டபடி சங்கானை மற்றும் மானிப்பாய் ப.நோ.கூ.சங்கங்களின் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பெற்றோல் எடுத்துச் செல்வதில் தாமதம் ஏற்பட்டதை அடுத்து குறிப்பிட்ட எரிபொருள் விற்பனை நிலையங்களில் மட்டும் நாளை வியாழக்கிழமை பெற்றோல் விநியோகிக்கப்படும் என்றும் - அவர் கூறினார்.

பெற்றோல் விநியோகம் தொடர்பாக அவர் விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில்:-

எரிபொருள் விநியோக அட்டையில் பெற்றோல் பெறாத வாகனங்களுக்கு மட்டும் முன்னுரிமை அடிப்படையில் இன்றைய தினம் பெற்றோல் வழங்கப்படும்.

பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் விவரம் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக வருமாறு:-

* யாழ்ப்பாணம் :- யாழ்ப்பாணம் ப.நோ. கூ. சங்கம்.
* நல்லூர் :- திருநெல்வேலி குகன் எரிபொருள் நி.நிலையம், ஜெயதேவா எரிபொருள் நி.நிலையம்.
* உடுவில், தெல்லிப்பழை - என்.எஸ். நாகலிங்கமும் மைந்தர்களும் எரிபொருள் நி.நிலையம், சுன்னாகம்.
* சங்கானை - சங்கானை ப.நோ.கூ.சங்கம்.
* சண்டிலிப்பாய் - மானிப்பாய் ப.நோ. கூ.சங்கம்.
* கரவெட்டி - கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்.
* பருத்தித்துறை/மருதங்கேணி - புலோலி ப.நோ.கூ.சங்கம்.
* கோப்பாய் - கோப்பாய் எரிபொருள் நி.நிலையம்.
* சாவகச்சேரி - சாவகச்சேரி ப.நோ. கூ. சங்கம்,
* தீவகம் - வேலணை ப.நோ.கூ.சங்கம்

இதேவேளை -

பெற்றோல் விநியோகிக்கப்படாத எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குரிய எரிபொருள் விநியோக அட்டைக்கு அருகில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் பெற்றுக்கொள்ளலாம்.

இம்முறை பெற்றோல் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அடுத்த விநியோகத்தின்போது முன்னுரிமை வழங்கப்படும் - என்று அதில் உள்ளது. (ப-111)

## தமிழ்க் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் 27 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கடந்த நாடாளுமன்ற அமர்வுகள் இடம் பெற்ற செப்ரெம்பர் 27, 28, 29 ஆம் திகதிகளில் தொடர்ந்து கூட்டமைப்பு எம்.பிக்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதைத் தொடர்ந்து நேற்று நாடாளுமன்றம் கூடியபோதும் சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்ந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தனும் நேற்றைய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொண்டார். கடந்த வாரம் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்ட சந்திரநேரு சந்திரகாந்தன் எம்.பி. நேற்றுச் சபைக்கு வரவில்லை. (ஐ)

# ஆக்கிரமிப்பு யுத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்களிடம் தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியதாவது:-

நோர்வே விசேட தூதுவர் மற்றும் நோர்வே தூதுவர் அடங்கிய குழுவினரைச் சந்தித்து நாங்கள் விரிவாகக் கலந்துரையாடியிருக்கிறோம்.

இன்றுள்ள நிலைமைகள் மற்றும் சர்வதேச கரிசனைகள் பற்றி கூடுதலாகக் கலந்துரையாடப்பட்டது.

சமரச முயற்சிகளுக்குத் தாங்கள் தயார், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை தாங்கள் மதிக்கிறோம் என்று ஸ்ரீலங்கா அரசு கூறிக்கொண்டு அதற்கு விரோதமாக எமது மக்கள் மீது பாரிய யுத்தத்தைத் தொடர்ந்துகொண்டிருக்கிறது. எங்கள் மக்களை படுகொலை செய்வது, இடம்பெயர வைப்பது, காணாமல் போகச் செய்வது மற்றும் எமது தாயகத்தை ஆக்கிரமித்தல் என்கிற வகையில் ஒரு முழு அளவிலான யுத்தத்தையே ஸ்ரீலங்கா அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதைச் சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதை விரிவாக விளக்கியிருக்கிறோம்.

அண்மையில் இணைத் தலைமை நாடுகள் கூடி இருதரப்பினரும் சந்தித்துப்பேச வேண்டும் என்றும் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தன.

''சர்வதேச சமூகத்தின் கோரிக்கையை மதித்து எங்களுடைய தலைமைப்பீடம் எமது இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தது. இருப்பினும், ஸ்ரீலங்கா இராணுவத்தினர் எமது மக்கள் மீது கொடூரமான தாக்குதல்களைத் தொடர்ந்தும் நடத்தி வருகின்றனர். பாரிய மனித அவலங்களை உருவாக்கி வருகின்றனர். சர்வதேச மனிதாபிமானப் பணியாளர்களைக் கொன்றுள்ளனர் - காணாமற் போகச் செய்துள்ளனர். போக்குவரத்துப் பாதையை மூடியுள்ளனர். பொருளாதாரத் தடையை உருவாக்கியிருக்கின்றனர். இப்படியாக யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஸ்ரீலங்கா அரசு முற்றாக மதிக்கவில்லை. கண்காணிப்புக் குழுவினரது நடவடிக்கையையும் கூட முடக்கி வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

### பாதையை மூடியதால் பல லட்சம் பேர் தவிப்பு

ஏ-9 பாதையை மூடி பல லட்சம் மக்கள் உணவின்றி தவிக்கின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கின்றனர். இப்படியான - யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு விரோதமான - மனிதாபிமானமற்ற - செயற்பாடுகளில் ஸ்ரீலங்கா இராணுவம் தீவிரமாக இறங்கியிருக்கிறது. இது முழு அளவிலான யுத்த நிறுத்த மீறலும், மனித உரிமை மீறலுமாகும் என்பதை இன்று நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளை ஏற்று எங்களுடைய தலைமைப்பீடம் சாதகமான முடிவைத் தெரிவித்திருந்தாலும், ஸ்ரீலங்கா இராணுவம் தொடர்ந்தும் எங்கள் பகுதிகளை ஆக்கிரமிக்கும் நடவடிக்கையைத் தொடருமேயானால் நிச்சயம் மாற்றம் ஏற்படும்.

இனியும் எமது பிரதேசத்தை ஆக்கிரமிக்கின்ற யுத்தத்தை எம் மக்கள் மீது ஏவிவிடுவார்களேயானால், நாங்கள் நிரந்தரமாகவே இந்தச் சமரச முயற்சிகளிலிருந்து விலகிக் கொண்டு விடுவோம். அதன்பின்னர், எங்களுடைய தாயகப் பிரதேசத்தில் உள்ள ஆக்கிரமிப்பு இராணுவம் முழுமையாக வெளியேற்றப்படும் வரை எந்தவித சமரச முயற்சிகளுக்கும் நாம் போகக்கூடிய வாய்ப்பு இருக்காது என்பதை நாங்கள் இன்று நோர்வே அனுசரணையாளர்களிடம் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.'' - என்றார் சு.ப. தமிழ்ச்செல்வன்.

## கோதுமை மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டிருப்பதை அடுத்து பாணின் விலையையும் உயர்த்துவதற்கு பேக்கரி உரிமையாளர் சங்கங்கள் தயாராகி வருகின்றன. (ஐ-12)

## பேச்சு நடத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. எனினும், விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து அது குறித்து உத்தியோக பூர்வமாக எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org